தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

வியாழக்கிழமை, 1973 நவம்பர் 22

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Deputy Inspector of Schools in each Panchayat Union

*33. Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to open offices of the Deputy Inspector of Schools in each Panchayat Union in the larger interest of education; and

(b) if so, when such offices will be opened ?

ஊராட்சி ஒன்றியத்திற்கொரு பள்ளித் துணை ஆய்வாளர்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வியின் பயன் கருதி, பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்றாக, திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு தனி பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகம் திறப்பதற்கான கோரிக்கை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இருப்பினும் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு படிப்படியாக நிறை வேற்றப்பட்டு வருகிறது.

[1973 நவம்பர் 22

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இப்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பள்ளித் துணை ஆய்வாளர் என்று ஏற்படுத்தும் போது, அவர்களை கெஸடெட் அந்தஸ்துக்கு உயர்த்துவதுபற்றி பரிசீலனை இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. எனவே அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் பள்ளிகளைக் கவனிப்பதற்கு என்று கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள், 'எக்ஸ்டென்ஷன்' அதிகாரிகள் இருக்கின்றார்கள். கல்வி இலாகாவில் ஏற்கெனவே கல்வித் துணை ஆய்வாளர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் இருவருமே இப்போது அநேகமாக மாறுபட்ட நிலையில் இல்லாமல் ஒரேவிதமான ஆய்வுகளைத்தான் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இப்படி இந்த இரண்டு அதிகாரிகளுக்குமே வேலைகளைப் பகிர்ந்து அளிக்காமல் இருக்கும்போது, இதில் யாராவது ஒருவர் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் உள்ள பள்ளிகள் சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனிக்க ஏற்பாடு செய்யும் வகையில் ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த விஷயத்தில் அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்பட வேண்டும் என்ற கருத்து அடிக்கடி தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இதுபற்றி அரசும் ஆராய்ந்து வருகின்றது. ஆராய்ந்து அதுபற்றித் தக்க முடிவெடுத்த பின்னர், அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்படும்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பள்ளித் துணை ஆய்வாளர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒருவர் வீதம் இருக்கின்றனரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே கல்வி விரிவு அதிகாரி என்று ஒருவர் இருக்கிறார். இப்போது நாம் குறிப்பிடுவது பள்ளித் துணை ஆய்வாளர்களைப் பற்றியதாகும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இப்போதுள்ள நிலையில், பள்ளித் துணை ஆய்வாளர்கள் பள்ளிகளை காலாகாலத்தில் ஆய்வு செய்ய முடியவில்லை. பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்திருக்கின்றது என்ற நிலை இன்று இருக்கும்

TRUTH ALONE TRIUMPHS

போது, இப்போதுள்ள நிலேயில் ஆண்டிற்கு ஒரு முறைதான் ஒரு பள்ளியை ஆய்வு செய்ய முடிகின்றது என்ற நிலே இருக்கும்போது, இந்த ஆய்வுகளே அதிகப்படுத்த முடியுமா என்று அரசு ஆராயுமா, இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நமது மாநிலத்தில் கல்வி நிலேயங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக, பள்ளித் துணே ஆய்வாளர்களின் எண்ணிக்கையும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒருவர் என்ற வீதத்தில் இருக்க வேண்டும் என்பது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது. எனவே இந்த ஆய்வுகள் அடிக்கடி நடைபெற வேண்டும், மிகச் சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெற வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். அதற்கு ஏற்றபடி அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்பட வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலேவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களேப் பொறுத்த வரையில், இப்போது அங்கே கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கின்ருர்கள். இவர்களேத் தவிர ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளே ஆய்வு செய்ய பள்ளித் துணே ஆய்வாளர்களும் இருக்கின்ருர்கள். இப்படி ஒரே கல்வி நிலேயத்தை ஆய்வு செய்வதற்கு இரண்டு அதிகாரிகள் தேவைதாஞ, இதில் சிக்கனத்தை முன்னிட்டு இதை ஒன்றுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலேவரவர்களே, இதுபற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். இந்த இரு அதிகாரிகளுடைய பணிகள் எந்தெந்த முறையில் வரையறுக்கப்படலாம் என்பதுபற்றி கல்வித் துறை ஆராய்ந்து வருகின்றது ஆராய்ந்து முடிவெடுத்த பின்னர், அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்படும்.

Revised Percentage of Grant to Aided Training Colleges

* 34 *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether G.O. Ms. No. 575, Education, dated 2nd May 1972 laying down revised percentage of grant to Aided Arts and Science Colleges will apply to Aided Training Colleges also; and

(*b*) if not, the reasons therefor ?